# ஸ்ரீ. நெல்லை டி. வி. கிருஷ்ணமூர்த்தி
## (1920-1945)

ஸ்ரீ. நெல்லை டி. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 24.11.1920 ல் ஸ்ரீ. விஸ்வநாத ஐயர் அவர்களுடையவும் ஸ்ரீமதி முத்துலெக்ஷ்மி அம்மாள் அவர்களுடையவும் ஐந்தாவது மகனாக, மும்மூர்த்திகள் ஜன்மம் கொண்ட திருவாரூரில் பிறந்தார். சங்கரநாராயண சர்மா என்று நாமகரணம் செய்யப்பட்டது. என்றாலும் கிருஷ்ணமூர்த்தி என்றே அழைக்கப் பட்டார். இவருக்கு மூத்தவர்களாக இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும், இளையவராக ஒரு சகோதரனும் இருந்தார்கள்.

உத்கிருஷ்ட சங்கீத பாரம்பரியம் கிடைத்த இவர் 7-வது வயதில் ஸ்ரீ. சங்கரநாராயண பாகவதரிடத்திலும் வயலின் வித்வான் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன் அவர்களிடத்திலும் சங்கீதம் கற்க ஆரம்பித்தார். 9-வது வயது முதல் பெரியப்பாவாகிய காயகசிகாமணி ஹரிகேசநல்லூர் முனைவர் எல்.முத்தையா பாகவதரின் கீழ் குருகுலவாசம் செய்து சங்கீதம் பயின்றார். 12 வருட பயிற்சிக்குப் பின்னர் திருநெல்வேலியில் வந்து சாதகம் செய்து தனதான ஒரு பாணியில் குரல்வளத்தை உருவாக்கினார். 23-வது வயது முதல் கச்சேரிகள் பாட ஆரம்பித்தார். தமிழில் திருநெல்வேலியை ‘நெல்லை’ என்றே அழைத்துவந்தனர். அப்படி இவரும் நெல்லை கிருஷ்ணமூர்த்தி என்றே அறியப்பட்டார். தென்னிந்தியா விலுள்ள பிரசித்தி பெற்ற சபைகளிலும் கோவில்களிலும் நவராத்திரி மண்டபங்களிலும் பலமுறை கச்சேரிகள்

நடத்தியுள்ளார். 1944 ல் மைசூர் கொட்டாரத்தில் கச்சேரி நடத்தி ஸ்ரீ ஜய சாமராஜேந்திர உடையாரிடமிருந்து பரிசு பெற்றார். மும்பை, கொல்கத்தா, டில்லி, பிலாய், ஹைதராபாத் முதலான இந்தியா முழுவதும் பலஇடங்களிலுமாக கச்சேரி நடத்தி பிரசித்தி பெற்றார். இவரது பிருகாசாரீரமும், ராகம், தானம், பல்லவி, மனோதர்மஸ்வரம் போன்ற பிரிவுகளில் அசாதாரணமான திறமை நேயர்களை இவர்பால் கவர்ந்தது. அவருடைய கம்பீரமான பிருகா குரல்வளத்தைக் குறித்தும், அபூர்வ ராகங்களில் உள்ள கிருதிகளை அவர் கையாளும் விதத்தை பல நாளிதழ்களிலும் புகழ்ந்து பிரசுரிக்கப்பட்டது.

சிருங்கேரி ஸ்வாமிகளை தரிசனம் செய்வதற்காக முத்தையா பாகவதருடன் சென்ற அனுபவத்தை மறக்கமுடியாத ஒன்றாக அவர் கூறியுள்ளார். ஸ்வாமிகளைப் பற்றி ஒரு கீர்த்தனம் சிட்டைப் படுத்தியிருப்பதாகவும் அதை பாடிக் கேட்பிப்பதற்கு விரும்பதாகவும் குருநாதர் சொல்வதைக் கேட்டார். மாலை 3 மணிக்கு நேரம் அனுமதிக்கப்பட்டது. குருநாதர் மதிய உணவுக்குப்பின் ஓய்வு எடுத்திருந்த நேரத்தில் 13 வயது இளைஞனான கிருஷ்ணமூர்த்தியின் மனதில் எந்த கீர்த்தனம், நான் எப்படி பாடுவது போன்ற எண்ணங்கள் எழுந்தது. கேட்பதற்கு தைரியமில்லாமல் குருநாதருக்கு உபசாரங்கள் செய்து கொண்டிருந்தபொழுது மேசை மேலிருக்கும் ‘ஆனந்த விகடன்’ என்ற புத்தகத்தை எடுத்தவரச் சொன்னார். அந்த புத்தகத்தின் பின்பக்கத்தில் ‘ஜகத்குரோ’ என்ற அடானா கிருதி

ஸ்வரப்படுத்தியிருந்தது. குருவிடமிருந்து கற்று மீண்டும் மீண்டும் பாடி சிலமணிநேரங்களில் படித்து, ஸ்வாமிகளின் முன் குருவுடன் சேர்ந்து பாடினார். அப்பொழுது, ''இந்த குழந்தை யார், இந்தப் பாலகன் உங்களைப்போலவே ஆவான்'' என்று கன்னட மொழியில் (ஈ உடுக நிம்ம ஸ்தானகே பர்த்தானே) ஸ்வாமிகள் கூறியபொழுது ஸ்ரீ.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை. 'முத்தையா பாகவதுருடைய தகுதிக்கு தான் வருவதா' என்று நினைத்தார். ஆனால், 13 வயது பாலகனாக இருந்த பொழுது தீர்க்கதரிசியான ஸ்வாமிகள் கூறிய வாக்கு பலித்தது. ஸ்வாதிதிருநாள் இசைக்கல்லூரியின் முதல் தலைமை ஆசிரியரின் பதவியை அலங்கரித்தவர் ஸ்ரீ. முத்தையா பாகவதராவார். அதே பதவியை அலங்கரித்தபிறகுதான் ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வேலையிலிருந்து ஓய்வுபெற்றார்.

1934-ம் வருடம் ஸ்ரீ கார்த்திக திருநாளின் ராஜகீய திருமணத்தின்பொழுது 'சித்ரோதயம்' என்ற பெயரில் திருவிதாங்கூர் சரித்திரத்தை ஹரிகதையாக தனது குருவுடன் இணைந்து இவரும் பாடினார். வைவஸ்வத மனு முதலான ராஜாக்களின் பெருமைகளை விளக்குவதற் கிடையே ஸ்வாதிதிருநாள் மஹாராஜாவின் அரசாட்சி நாட்களை வர்ணிக்கும்பொழுது, இசைக்காக அவர் செய்த மகத்தான பங்களிப்புகளை சில கிருதிகளுடன் விளக்கினார். திருப்தியடைந்த அம்மை மகாராணி, ஸ்வாதிதிருநாள் மகாராஜாவின் கிருதிகளை சேகரித்து சிட்டைப்படுத்தும் மகத்தான பணியை முத்தையா

பாகவதரிடம் ஒப்படைத்தார். ஸ்ரீ முத்தையா பாகவதர் சிட்டைப்படுத்திய ஸ்வாதி கிருதிகளை அவருக்கு திருப்தியாகும் வரை மீண்டும் மீண்டும் பாடி ஒழுங்குபடுத்திய பிறகு அதை கொட்டாரத்தில் அம்மமஹாராணி முன்னதாக பாடி அனுமதி வாங்கிய பிறகே பிரசுரிக்கக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ நாராயண பாகவதர், வித்வான் ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் மேற்கூறிய முறையில் பாடினார்கள் (1934-1938). ஸ்ரீ முத்தையா பாகவதரின் ஆலோசனைப்படி ஸ்வாதிதிருநாளின் கிருதிகள் பிரசாரத்தில் கொண்டு வருவதற்காக 1939-ல் ஸ்வாதிதிருநாள் இசைக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தனது 26-வது வயதில் சகோதரியின் மகளான எஸ். கோமதியம்மாளை திருமணம் முடித்தார். அவர் ஒரு இசைமேதை மட்டுமல்லாது கீர்த்தனங்கள் எழுதுவதிலும், அபங்கங்கள், சதாசிவ பிரம்மேந்திராள் கிருதிகள் போன்றவைகளுக்கு ராகமிட்டு கற்பிப்பதிலும், ராதா கல்யாணம், தீபபிரதக்ஷிணம் போன்ற பக்திசாதனைகளிலும் மிகையுற்ற வாழ்க்கை துணையா யிருந்தார். இந்த தம்பதியினருக்கு ஐந்து குழந்தைகள். மூத்த மகள் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி நாராயணஸ்வாமி (கானப்ரவீணா-வீணை) அஹமதாபாதில் கிளாசுகள் நடத்துவதோடு (வாய்ப்பாட்டு, வீணை, பஜனை) அன்னையின் வாரிசாக திவ்யநாமம், சௌந்தர்ய லஹரி பாஷ்யம் போன்றவைகளும் நடத்திவருகிறார். இரண்டாவது மகன் ஸ்ரீ.கெ.விஸ்வநாதன் ‘எ’ கிரேட் வயலினிஸ்டாக உள்ளார். வாய்ப்பாட்டிலும் இவர் ஆகாசவாணியில்

‘எ’ கிரேட் கலைஞரும், கோழிக்கோடு ரேடியோ நிலையத்திலிருந்து ஓய்வுபெற்ற கலைஞருமாகும். தனது மூத்த சகோதரனின் உருவமும், அவரைப்போல் வயலின் வாசிப்பதில் மிகுந்த ஆர்வமும் இருந்ததினால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு விஸ்வநாதனிடம் தனிப்பட்ட பாசமிருந்தது. நள்ளிரவு வரையிலும் பாடி விஸ்வநாதனை சிறந்த வயலின் கலாகாரனாக உருவாக்கு வதற்கு அவர் அயராது முயற்சிசெய்ததை இன்றும் திருவனந்தபுரம் கிராமவாசிகள் கூறுவார்கள். மாலை வெயிலில் சைக்கிள் மிதித்து ஸ்டாடிவேரியஸ் வயலின் வாங்குவதற்கு சென்றது மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும் என்று அவர் கூறியிருக்கிறார்.

மூன்றாவது மகள் டோ.கெ.ஜெயலக்ஷ்மி எர்ணாகுளம் மகாராஜாஸ் கல்லூரியில் இசைப்பிரிவு அதிகாரியாகப் பணியாற்றி 2009 மார்ச்சில் ஓய்வுபெற்றார். இன்றும் அவரது இசைப்பயணம் தொடர்கிறது (வாய்ப்பாட்டு, வீணை கற்பித்தல், இசை சொற்பொழிவு, செமினாருகளுக்கு லக்சர் டெமோன்ஸ்ட்ரேஷன் போன்றவை). தென்னிந்தியாவின் மகளிர் இசைக்கலைஞர்களுக்கான போஸ்ட் டோக்கடரேட் (சங்கீதம், நடனம், ஹரிகதை, வாத்திய இசை போன்றவை) யு.ஜி.ஸி. யில் சமர்ப்பித்திருக்கிறார். நான்காவது மகள் ஸ்ரீமதி சரஸ்வதி சங்கர் பின்னணிப் பாடகியும் திருவனந்தபுரத்தில் வீணை, வாய்ப்பாட்டு, பஜனை, ராதாகல்யாணம் போன்றவைகள் கற்பித்தும் வருகிறார். இவர் கேரளாவின் உஷா உதுப் என்றும் அறியப்படுகிறார். ஐந்தாவது மகன்

ஸ்ரீ ஸ்ரீநிவாசன் மிருதங்கம், தபலா, ஜாஸ் முதலான எல்லாவித கொட்டு வாத்தியங்களும் (பெர்க்யூஷன் இன்ஸ்ட்ருமென்ட்) கையாளுவதில் தேர்ச்சிபெற்றவராவார். தபலா, மிருதங்கம், கடம் போன்றவையில் ஆகாச வாணியின் கிரேடட் ஆர்ட்டிஸ்டான இவர் கேரளத்தில் கசல் இசை நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தி தொடர்ந்து நடத்தியும் வருகிறார்.

மகாராணி சேதுபார்வதிபாயியும் கார்த்திகைத் திருநாள் மகாராஜாவும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்களை அவருடைய 26 வயதில் திருவனந்தபுரத்திற்கு வரவழைத்து ஸ்வாதி திருநாள் இசைக்கல்லூரியில் ஆசிரியராக பணியிருத்தினார்கள்.

1959 ல் **நாத ஔஷதம்** என்ற பெயரில் ஒரு இசை நாடகத்தை எழுதி ஸ்வாதி திருநாள் அகாடமியில் அதை அரங்கேற்றினார். மியூசிக் தெராப்பி என்று தற்பொழுது ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ள விஷயங்களை வருடங்களுக்கு முன்பே இவருக்கு இந்த நாடகத்தின் மூலமாக நிரூபிக்க முடிந்தது. மருத்துவர்களால் கைவிடப்பட்ட, வாதநோயால் பாதிக்கப்பட்ட தலைமூத்தவர் எதிர்பாராத விதமாக பேரக்குழந்தைகளுக்கு சங்கீதம் கற்பிப்பதை பலமாதங்கள் கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அப்படி கேட்டதன் பயனாக அவருடைய ஆரோக்கியத்தை திரும்பப்பெற்று பூரணமாக குணமடைந்து அவரால் நடக்கமுடிந்தது என்பதுதான் கதை. இப்போது பிரசித்தி பெற்று

விளங்கக்கூடிய இசைக்கலைஞரான ஸ்ரீமதி பால்குளங்கரை அம்பிகாதேவி போன்றவர்கள் மேற்கூறிய நாடகத்தில் பாடி நடித்த மாணவிகள்.

1960 முதல் 1963 வரை த்ருப்பூணித்துறை அகாடமியில் ஸ்ரீ ஜேசுதாஸ் மாணவராக இருந்த தருணத்தில் ஒருமுறை அவர் ஒரு ஹிந்தி பாட்டு பாடினார். ‘குரல் மிகவும் நன்றாக இருக்கிறது, பின்னணி இசைப்பாடகராக முயற்சி செய்தால் நன்றாக இருக்கும்’, என்று தனது குரு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியதாக ‘சூர்யா’ நடத்திய ‘குருபூஜை’ என்ற நிகழ்ச்சிக்காக நடத்திய பிரஸ் கோண்ஃப்ரன்சில் ஸ்ரீ ஜேசுதாஸ் அவர்களே கூறியுள்ளார்.

முன்காலங்களில் திரைப்படங்களில் சங்கீதம் மூலமாகவே வசனங்கள் இருந்தது. முப்பத்தைந்திற்கும் மேலான பாடல்கள் ஒரு திரைப்படத்தில் இருக்கும். ஸ்ரீ ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் எழுதி இசையமைத்த சங்கீத லவகுசா, ராதாகிருஷ்ணா, திருஞானசம்பந்தர், வள்ளீகல்யாணம் முதலான திரைப்படங்களில் ஸ்ரீ நெல்லை கிருஷ்ண மூர்த்தி இரண்டரைக் கட்டை சுருதியில் பாடி நடித்திருக்கிறார். ஸ்ரீ.எ.வி.மெய்யப்ப செட்டியாரின் ஸ்டுடியோவில்தான் படப்பிடிப்பு நடந்தது. லவகுசாவில் லவனாகவும் ராதாகிருஷ்ணாவில் கிருஷ்ணனாகவும் (ஸ்ரீமதி சந்தானலெட்சுமி ராதையாக அவருடன் நடித்தார்), திருஞானசம்பந்தரில் நம்மாழ்வாராகவும், வள்ளீகல்யாணத் தில் முருகனாகவும் இவர் பாடி நடித்துள்ளார். சிவாஜி கணேசனும் இவரும் ஒரே காலகட்டத்தில் நடிக்க ஆரம்பித்தார்கள் (போய்ஸ்

கம்பனியில்) என்றாலும் இவருக்கு சங்கீதத்தின் மேலிருந்த பிரேமையினால் தொடர்ந்து நடிக்கவில்லை.

ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி, சுவாதி திருநாள் இசைக்கல்லூரியில் ஆசிரியராகவும் த்ருப்பூணித்துறை ஆர்.எல்.வி. கல்லூரியிலும், சுவாதி திருநாள் கல்லூரியிலும் தலைமை ஆசிரியராகவும் மொத்தம் 35 வருட பணிக்குப் பிறகு 1976 மார்ச் 31-ம் தேதி பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

1950 முதல் ‘எ’ கிரேட் ஆர்டிஸ்டாக ‘ராகம்- தானம்-பல்லவி’, ‘கோண்ஸர்ட்’ போன்றவை திருவனந்தபுரம் ஆகாசவாணி ரேடியோவில் நிகழ்த்தியுள் ளார் (1950-2006). ஆல் இந்தியா ரேடியோவில் ரேடியோ சங்கீத ஸம்மேளனம், நாஷனல் ப்ரோகிராம், நாஷனல் சானல் போன்றவையும் நிகழ்த்தினார். 1992 ல் ‘எ-டோப்’ கிரேடாக ஆனார். 1998-ல் திருவனந்தபுரம் ஆகாசவாணியில் தொடர்ச்சியாக 50 வருடங்கள் சேவை செய்தமைக்காக அவர் கௌரவிக்கப்பட்டார்.

1991-ல் கேரள கலாமண்டலம் இவரை கௌரவித்தது. 1994-ல் கேரள பல்கலைக் கழகம் இவரை ஆதரித்தது. 1995-ல் சுவாதி திருநாள் சங்கீத சபாவில் **‘காயக ரத்தினம்’** என்ற பட்டம் அளித்து ஆதரிக்கப்பட்டார். 1999-ல் திருவனந்தபுரம் ரோட்டரி கிளப், இசையில் புரிந்த அசாதாரணமான சேவைகளுக்காக ஆதரித்தது. 2001-ல் கேரள அரசு, இசை உலகத்திற்கு

கொடுத்த மகத்தான சேவைகளையும் நன்கொடைகளையும் மானித்து ‘மானவீயம்-பிரதிபா ப்ரணாமம்’ அளித்து ஆதரித்தது. அதே வருடம் நாஷனல் சென்டர் ஃபோர் தி ஃபெர்ஃபோமிங் ஆர்ட்டிஸ்ட் - டாட்டா இன்ஸ்டிட்யூட் ஃபோர் ரிசர்ச் வர்க், மும்பைக்காக ஸ்ரீ முத்தையா பாகவதரின் கிருதிகளை மட்டும் உட்கொண்ட 2 மணிநேரம் நீண்ட கச்சேரியும் நடத்தினார். இதன் ஒலிநாடா சங்கீத சம்பந்தமான ஆய்வுக்காக மேற்கூறிய நிறுவனத்தில் இன்றும் கிடைக்கிறது.

2002-ல் சங்கீத நாடக அகாடமியின் ஃபெல்லோஷிப்பும் கிடைத்து. அதேவருடம் திருச்சூர் ‘சுருதிபாரதியில்’ இருந்து ‘சங்கீத ரத்னா’ அவார்டும் அளித்து ஆதரிக்கப்பட்டது. நாஷணல் நெட்வர்க் புரோகிராமில் நிகழ்ச்சி நடத்தியுள்ளார். எ.ஐ.ஆர்.மேஜர் ஆடிஷன் போர்டில் உறுப்பினராக இருந்தார் (20 வருடங்களுக்கும் மேலாக). கல்லூரிகளில் ஆசிரியர் நியமனத்தில் பி.எஸ்.சி. சப்ஜக்ட் எக்ஸ்பர்ட்டாக பணியாற்றியுள்ளார் (1972 முதல் 1983 வரை). ஸ்டேட் யூத் ஃபெஸ்டிவலில் பல வருடங்கள் பள்ளித்தலத்திலும் கல்லூரித் தலத்திலும் ஜட்ஜாக நேர்மையாகப் பணியாற்றியுள்ளார்.

1991-ல் ஹெல்பேஜ் இந்தியா திருவனந்தபுரத்தில் நடத்திய ஸ்மைலிங் கோண்டஸ்டில் ‘கிரான்பா கிங்’ ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிங்கம் போன்ற கம்பீரமான நடையும், உண்மையான அதேநேரம் கம்பீரவுமான பேச்சுத் திறமையும் ஒரு தலைமை ஆசிரியர் என்ற நிலையிலும் அவருக்கான ஒரு தனியிடத்தை தந்தது.

தன்னுடைய தேவைக்காகவோ, தன்னுடைய குழந்தைகளுக்காகவோ யாரிடமும் சிபாரிசுமாக இவர் செல்லமாட்டார். உண்மையான விஷயங்களை யாரிடமும் முகம்பார்க்காமல் தைரியத்துடன் கூறுவார். அதுபோலவே வளைந்த வழியில் காரியங்கள் நடத்துவதற்கு சிபாரிசுமாக யாரும் இவரை தைரியத்துடன் அணுகவும் மாட்டார்கள்.

சிறந்த ஆசிரியர், சிறப்பான இசை கலைஞன், பெயர்பெற்ற அதிகாரி என்று பல துறைகளில் தன்னுடைய மிகவை வெளிப்படுத்தியிருக்கும் இவர் முத்தையா பாகவதரால் இயற்றப்பட்ட (சம்பூர்ண ராகங்களிலும், உமாபரணம், புஷ்பலதிக, குந்தளவராளி முதலான அபூர்வ ராகங்களிலும்) சுவாதி திருநாள் கிருதிகளும், முத்தையா பாகவதரின் ஊர்மிகா, மனோரமா முதலான கிருதிகளையும் பாடிப் பரப்புவதற்கான தனி ஆர்வத்தையும் காண்பித்தார். சாதாரண இசைக்கலைஞர்களில் காணமுடியாத ஒரு தனிச்சிறப்பான குணாதிசயம் என்னவென்றால் கிரிக்கெட் விளையாட்டை ரசிப்பதில் பேரார்வம் கொண்ட தம்பதியர்கள் ஆகும் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இப்போது புகழ்பெற்று விளங்கும் ஸ்ரீ கெ.ஜே.ஜேசுதாஸ், ஸ்ரீ பெரும்பாவூர் ஜி. ரவீந்திரநாத், ஸ்ரீ திருவிழா ஜெயசங்கர், ஸ்ரீ வெங்கிட்ட ரமணன் போத்தி, டோக்டர். ஓமனக்குட்டியம்மா, ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன், ஸ்ரீ நெய்யாற்றின் கரை வாசுதேவன், ஸ்ரீ எம்.ஜி.ராதாகிருஷ்ணன், ஸ்ரீமதி.ஜி.சீதாலெக்ஷ்மி, ஸ்ரீ பிரபாகரவர்மா போன்றவர்களும் அதைத்தவிர மூன்று கல்லூரிகளிலும் ஆசிரியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களும், ஸ்ரீமதி புவனேஸ்வரி மதுசூதனன், டாக்டர் சிந்து, டாக்டர் சஜி, டாக்டர் மோகனா சர்மா போன்ற இன்று பணியிலிருப்பவர்களும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அருமை சிஷ்யர்களாவார். ஆயிரக்கணக்கான சிஷ்யபரம்பரைகளை இசை உலகத்திற்காக இவர் நன்கொடையளித்துள்ளார்.

சுவாதி திருநாள் இசைக் கல்லூரியில் தலைமை ஆசிரியராக இருக்கும் நேரத்தில், தங்கும் வசதி கிடைக்காமல் (சாதாரணமாக இசை கற்கும் மாணவ மாணவிகளை விடுதியில் தங்கவைத்தால் சாதகம் செய்வதற்கு இயலாது) தவிக்கும் குழந்தைகளுக்கு கல்லூரியின் அருகிலேயே தங்கும் விடுதி ஆரம்பிப்பதற்கான உத்தரவை வாங்கினார். மகளிர் விடுதிக்கு தேவையான வரைபடம் தயார் செய்து அதற்கான நடவடிக்கைகளும் எடுத்தார்.

கல்லூரியின் வெள்ளி விழாவையொட்டி சுவாதி திருநாள் இசைக் கல்லூரி ஆடிட்டோறியத்திற்கு ஐ.எ.எஸ். சங்கரநாராயண அய்யரின் ஆலோசனைப்படி

ஹரிகேசநல்லூர் டோக்டர்.எல்.முத்தையா மெம்மோரியல் ஹால் என்ற பெயர் சூட்டினார். ஸ்ரீ முத்தையா பாகவதரின் உருவச்சிலையும் அங்கே அமைக்கப்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, தன்னுடைய மூத்த மகளாகவும் பிரதம சிஷ்யையாகவும் வளர்த்தியெடுத்த ஸ்ரீமதி. எஸ். ருக்மிணி கோபாலகிருஷ்ணன் (சகோதரியின் மகள்) வீணையில் 'எ-டாப்' ஆர்ட்டிஸ்டாகும். பாலக்காடு செம்பை மெம்மோரியல் இசைக் கல்லூரியிலிருந்து தலைமை ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வெடுத்த இவர் 18-வது வயதில் பாரதத்தின் முதல் ஜனாதிபதியான ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் அவர்களிடமிருந்து முதலாவது அகில பாரத வானொலி நிலையத்தின் போட்டியில் கலந்துகொண்டு விருதைவென்ற வைணிக விதூஷியாகும்.

சுவாதி திருநாள் கிருதிகளை சேகரித்து சிட்டைப் படுத்தி, அந்த கிருதிகளை பிரசாரம் செய்வதற்காக சுவாதி திருநாள் இசைக் கல்லூரி ஆரம்பிக்கும் வரையிலும், ஸ்ரீ முத்தையா பாகவதருடன் இருந்த ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி, அவர் நடத்திய கச்சேரிகள் வழியாக ஏராளமான சுவாதி கிருதிகளை பிரச்சாரமும் செய்தார்.

2003-ம் ஆண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இரத்ததில் யூரியாவின் அதிகமானதைத் தொடர்ந்து திருவனந்தபுரம் பி.ஆர்.எஸ். மருத்துவமனையில்

தீவிர சிகிச்சைப் பிரிவில் (சி.சி.யு) ஒருவாரகாலம் தங்கவேண்டிய சூழ்நிலை அமைந்தது. அந்த நேரத்திலும் நர்சுகளுக்கு சங்கராபரண ராகத்தை கற்பித்தும், நித்திய ஜபங்களை உருவிட்டும் 'ரேடியோ நிலையத்தில் ஸ்ரீ வெங்கிடாசலமும், ஸ்ரீ சுரேந்திரனும் வந்தாச்சு, எனக்கு ரிக்கார்டிங்குக்கு போகணும்' என்று அடம்பிடித்ததும் ஒருபோதும் மறக்க இயலாது.

2005 ஆகஸ்ட் முதல் மீண்டும் நோய்வாய் பட்டார் என்றாலும் அவர் நாடிநரம்புகளில் சங்கீதம் மட்டுமே இருந்தது. காலமாவதற்கு இரண்டு வாரம் முன்னால் போலும் அவர் 'சாவேரி' ராகம் பாடி 'சங்கரி சங்குரு' என்ற கிருதியை பாடுவதற்கு தன்னுடைய குழந்தைகளைக் கேட்டுக்கொண்டார். நாங்கள் அப்படியே செய்தோம். **'சுகியவ்வரோ'** என்ற கிருதியை பாடும்பொழுது விட்டுப்போன சங்கதியை அதைப் பாடிக் காண்பித்தார். மரணம் வரையிலும் கம்பீரமான குரல்வளத்திற்கு எந்தவிதமான குறைவும் இல்லாமல், குருநாதரின் பூரணமான ஆசியைப்பெற்ற, ஒருநாளும் மறக்கமுடியாத ஒரு கலைஞன் தான் அவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மரணம்வரையிலும் தன்னுடைய சீடர்களையும் பந்துஜனங்களையும் நல்ல ஞாபக சக்தியுடன் அவர்களுடன் பேசவும், இசையைக்குறித்து தெளிவான ஆலோசனைகள் கொடுக்கவும் முடிந்த இவர் எல்லோரையும் ஒன்றுபோல் நிறைந்த மனதுடன் ஆசிகளை வழங்கியுள்ளார். இசைக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த இவர் 2006 ஜனவரி 25-ம் தேதி புதன்கிழமை

காலை 5 மணிக்கு மகள் சரஸ்வதி சங்கரின் இல்லத்தில் வைத்து இந்த உலகவாழ்க்கையிலிருந்து விடைபெற்றார்.

ஜனனம் தமிழகத்திலென்றாலும் வாழ்க்கையின் 75 வருடங்கள் கேரளாவில் சங்கீதத்துடன் செலவிட்டார். சுவாதி திருநாள் கிருதிகளை சேகரித்து உருவம் கொடுக்கும் பெரும்பணியில் பங்காளரும், 35 வருடங்களுக்கும் மேலாக சுவாதி திருநாள் இசைக் கல்லூரியின் இசை ஆசிரியராகவும், கச்சேரிகள் வழியாகவும் சிஷ்ய பரம்பரைகள் வழியாகவும் சுவாதி கிருதிகளை பிரச்சாரம் செய்த இசைக்கலைஞனும் ஆன இவரைவிட சுவாதி திருநாள் விருதை பெருவதற்கு தகுதியுடைய மற்றொருவர் உண்டோ? என்ற  கேள்வி இன்றும் கேள்விக்குறியாகவே நிற்கிறது.